<u>சுருக்கம்</u>

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையம் (டான்சில்க்) –2005–06ஆம் ஆண்டில் இணையம் வணிகவரித் துறைக்குச் செலுத்த வேண்டிய 1 சதவீத கூடுதல் விற்பனை வரி மற்றும் 150 சதவீத அபராதத் தொகை தள்ளுபடி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் ( ஜி2) துறை</u>

அரசு ஆணை (நிலை) எண். 152

நாள். 22.10.2010
ஐப்பசி 05,
திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க.–

1. அரசு ஆணை (நிலை) எண்.39, வணிகவரித்துறை, நாள் 1.4.2002
2. துணை வணிகவரி அலுவலர், காஞ்சிபுரம் (தெற்கு), கடித எண்.டி. 1621912/2005–06 நாள் 28.1.2008
3. பட்டு வளர்ச்சித்துறை ஆணையர் கடிதம் ந.க.எண்.3627/ ஐசி1/ 2008, நாள் 21.2.08, 6.11.09 மற்றும் 4.5.2010

------

<u>ஆணை.–</u>

மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையம் (டான்சில்க்), தனது கோவை கிளையின் மூலமாக, 2005–2006ம் ஆண்டில் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட "சைனா பட்டினை", ரூ.13,36,08,991/–க்கு விற்பனை செய்ததென்றும், காஞ்சிபுரம் துணை வணிகவரி அலுவலரின் 20.3.07–ம் நாளிட்ட வரி விதிப்பு ஆணையின்படி, மேற்படி விற்பனைத் தொகையில் 4 சதவீத விற்பனை வரியாக ரூ.53,45,333/–ம் மற்றும் 5 சதவீத கூடுதல் விற்பனை வரித் தொகையாக ரூ.2,67,302/–ம் அரசுக்குச் செலுத்தியது என்றும், இருந்த போதிலும், காஞ்சிபுரம் துணை வணிக வரி அலுவலர் தனது 28.1.2008–ம் நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையம் (டான்சில்க்), கோவை கிளை 2005–06–ம் ஆண்டில், ரூ.10.00 கோடிக்கும் அதிகமாக அதாவது ரூ.13,36,08,991/–க்கு விற்பனை செய்துள்ளதால், அத்தொகையில், 1 சதவிகித கூடுதல் விற்பனை வரியாக ரூ.13,36,089/– மற்றும் 150 சதவிகித அபராதத் தொகையினை, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, பிரிவு 12(3)(b) –ன் கீழ், டான்சில்க் நிறுவனம் வணிகவரித் துறைக்குச் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்ததாக பட்டு வளர்ச்சித்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. பட்டு வளர்ச்சித்துறை ஆணையர் மேலும், தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையத்தின் தனி அலுவலர், இணையத்தின் வியாபார அளவு மற்றும் விலை உயர்வு ஆகியவற்றினை அந்நிதியாண்டின் ஆரம்பத்திலேயே அனுமானிக்க இயலாதென்றும், காஞ்சிபுரம் துணை வணிக வரி அலுவலர், முன்னர் பிறப்பித்த வரி விதிப்பு ஆணையின்போதே, இக்கூடுதல் விற்பனை வரி குறித்து எதும் எழுப்பவில்லையென்றும், வணிகவரித்துறை கோரிய 1 சதவிகித கூடுதல் விற்பனை வரியினை, ஒரு கால இடைவெளிக்குப் பின்னர், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து வசூலிக்க இயலாதென்றும், 2005–06–ம் ஆண்டில் டான்சில்க் நிறுவனம் ஈட்டிய 1 சதவிகித சிறிதளவு இலாபத் தொகை ரூ.26.26 இலட்சம், தமிழ்நாடு கூட்டுறவு சட்டம் மற்றும் விதிகளின்படி, பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டதெனவும்

எனவே, அவ்விற்பனை வரித் தொகையினை செலுத்த இணையத்திடம் நிதி ஏதுமில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், சேலம் மாவட்ட மாவச்சத்து மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கத்திற்கு கூடுதல் விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்ததைப் போன்று, டான்சில்க் நிறுவனம் 2005–06–ம் ஆண்டில், அரசுக்குச் செலுத்த வேண்டிய 1 சதவிகித கூடுதல் விற்பனை வரித் தொகை ரூ.13,36,089/–ம் மற்றும் 150 சதவிகித , அபாரதத் தொகை ரூ.20,04,134/–ம் செலுத்துவதிலிருந்து தள்ளுபடி செய்து ஆணை வழங்குமாறு, பட்டு வளர்ச்சித்துறை ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

4. பட்டு வளர்ச்சித்துறை ஆணையரின் செயற்குறிப்பினை நன்கு கவனமாக ஆய்வு செய்து, அரசு ஆணை (நிலை) எண்.39, வணிகவரித் துறை, நாள் 1.4.2002–ல், சேலம் மாவட்ட மாவச் சத்து மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கத்திற்கு, கூடுதல் விற்பனை வரிச் செலுத்துவதிலிருந்து விலக்களித்ததைப் போன்று, தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையம் (டான்சில்க்), 2005–06–ம் ஆண்டில், வணிக வரித்துறைக்குச் செலுத்த வேண்டிய 1 சதவீத கூடுதல் விற்பனை வரி ரூ. 13,36,089–ம் மற்றும் 150 சதவீத அபராதத் தொகை ரூ.20,04,134/–ஐ, இது ஒரு முறை மட்டும் அளிக்கும் சலுகையென்ற நிபந்தனையுடன், அரசுக்குச் செலுத்துவதிலிருந்து தள்ளுபடி செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.59725/10, நாள் 20.10.2010–ல், பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா. நாராயணசாமி
அரசு துணைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பட்டு வளர்ச்சித்துறை ஆணையர், சேலம்–1
மாநிலக் கணக்காயர், (அ(ம)இ), சென்னை – 18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை) , சென்னை –18
மாண்புமிகு அமைச்சர் (ஊரகத்தொழில் மற்றும் கால்நடை பராமரிப்பு) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை –9
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு), சென்னை –79
கருவூல கணக்கு அலுவலர், சேலம்
ஆணையர், அரசு தகவல் மையம், சென்னை –25
நகல்.–
நிதி (தொழிற்) துறை, சென்னை – 9
நிதி (வ.செ/பொது) துறை, சென்னை – 9
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (பிரி) துறை,சென்னை – 9
வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை , சென்னை – 9
இருப்புகோப்பு/உதிரிநகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

(கையொப்பம்) 22.10.2010
பிரிவு அலுவலர்